துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (17.10.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை இயக்குநர் எஸ்.கணேஷ், மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ.) எஸ்.சுதா, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இயக்குநர் அ.சுந்தரம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொளத்தூர் தொகுதியில் முதல்வர் ஆய்வு!

முதல் பக்கத் தொடர்ச்சி

பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பாலாஜி நகர் மருத்துவ முகாம்

பருவமழை காலத்தில் பொது மக்களுக்கு நோய்தொற்றுகள் ஏற்படாமல் பாதுகாத்திடும் பொருட்டு பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் குமரன் நகர் சாலையில் உள்ள பாலாஜி நகரில் மருத்துவ முகாமினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இம்முகாமில் 12 மருத்துவர்கள் கொண்ட குழு சிகிச்சை அளித்து வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு முட்டை, ரொட்டி, பால் போன்ற அத்தியாவசியப் பொருட்களை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

தணிகாசலம் கால்வாய்!

தொடர்ந்து, அயனாவரம் மற்றும் மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் உபரிநீர் கால்வாயில், கூடுதலாக உபரிநீர் செல்லும் வகையில் 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

அதனைத் தொடர்ந்து, பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் சென்னை, பெரம்பூர், செம்பியம், ராகவா தெருவில் அமைந்துள்ள சி.எஸ்.ஐ. புத்துயிர் சிறப்புப் பள்ளியில் பயிலும் 70 மாற்றுத்திறனாளி குழந்தை களின் நலன் மற்றும் பள்ளியின் மேம்பாட்டிற்காக 2 கணினிகள், 1 பிரிண்டர், 2 இரும்பு பீரோ, அத்தியாவசியப் பொருட்கள், என 2 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களையும், அச்சிறப்பு பள்ளியின் தாளாளர் டாக்டர் எட்வின் ராஜ்குமார் அவர்களிடம் பள்ளி மேம்பாட்டிற்காக நிதியுதவியும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

பின்னர், ஜம்புலிங்கம் பிரதான சாலையில் உள்ள காமராசர் சத்திரத்தில், 600 தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள், அரிசி, ரெயின் கோட், புடவை, பெட்ஷீட் (போர்வை), ரஸ்க், பால் பவுடர், துவரம் பருப்பு, மிளகாய்த்தூள், சமையல் எண்ணெய், லுங்கி உள்ளிட்ட 10 அத்தியாவசியப் பொருட்களை வழங்கி, தூய்மைப் பணியாளர்களுக்கு பிரியாணியுடன் கூடிய மதிய உணவினை முதலமைச்சர் அவர்கள் அன்புடன் பரிமாறி, அவர்களுடன் உணவருந்தினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஜெர்மனியில் நடைபெறும் பிராங்க்பர்ட்

பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் - தமிழ்நாடு அரசின் அரங்கு!

இந்திய அரசின் துணைத் தூதர் பி.எஸ்.முபாரக் திறந்து வைத்தார்! முனைவர் பொ.சங்கர் ஐ.ஏ.எஸ். பங்கேற்பு!

பிராங்பர்ட், அக். 18-

“தமிழை உலகுக்கும், உலகை தமிழுக்கும்” என்ற இலக்குடன், தமிழ் நாடு அரசு சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சியைக் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தி வருகிறது. தமிழ் மொழியிலுள்ள சிறந்த படைப்புகளை இந்திய மொழிகளிலும், சர்வதேச மொழிகளிலும் மொழி பெயர்ப்பதற்கும், பிற மொழிகளிலுள்ள சிறந்த படைப்புகளைத் தமிழ் வாசகர்களுக்கு மொழிபெயர்த்து வழங்கிடவும் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் பொது நூலக இயக்ககம் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஆகியவற்றால் சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி 2023ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜனவரி 16 18 தேதிகளில் சென்னையில் நடத்தப்பட்டு வருகிறது.

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் 40 நாடுகள் கலந்து கொண்டதுடன் 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. வரும் ஆண்டிலும் சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி விரைவில் சென்னை வர்த்தக மையத்தில் நடத்தப்படவுள்ளது.

உலகளவில் மிகப் பெரிய பன்னாட்டு புத்தகக் கண்காட்சி ஜெர்மனியின் பிராங்பர்ட் நகரில் ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் நடைபெற்று வருகிறது. இந்த பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில், நூற்றுக்கும் மேற்பட்ட உலக நாடுகளிலிருந்து அரசு நிறுவனங்கள், தனியார் பதிப்பாளர்கள் மற்றும் மொழி பெயர்ப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள். பிராங்பர்ட் புத்தகக் கண்காட்சியில், தமிழ்நாடு அரசு 2022 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. இவ்வாண்டிலும் பிராங்க்பர்ட் பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சிக்கென பிரத்தியேகமாக அரங்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கை 16.10.2024 அன்று ஜெர்மனி நாட்டிற்கான இந்திய அரசின் துணைத் தூதர் மேதகு B.S. முபாரக் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ் மொழியின் தொன்மை மற்றும் தனிச்சிறப்பான இலக்கிய வளத்தின் செழுமையையும், பெருமையையும் உலகளவில் பரவச் செய்யும் நோக்கிலும், 2025 ஆண்டில் நடைபெறவுள்ள சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் கலந்து கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் வெளிநாடுகளைச் சேர்ந்த அரசு நிறுவனங்கள், பதிப்பாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பு வல்லுநர்களை நேரில் சந்தித்து அழைப்பு விடுப்பதற்கு தமிழ்நாடு அரசின் சார்பாக ஆறு பேர் கொண்ட குழு பிராங்க்பர்ட் புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டுள்ளது. இக்குழு, தமிழ்நாடு அரசின் மூலம் வழங்கப்படும் ‘தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியம்’ குறித்தும் பன்னாட்டுப் பதிப்பாளர்களிடம் எடுத்துரைப்பதோடு, சர்வதேச பதிப்புத் துறை முன்னேற்றங்கள் குறித்தும் அறிந்து வரும்.

இவ்வாண்டு நடைபெறும் பிராங்க்பர்ட் பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் தமிழ்நாடு அரசின் சார்பாக பொது நூலக இயக்குநரும் மற்றும் தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண் இயக்குநருமான முனைவர். பொ.சங்கர். தலைமையில் முனைவர்.தே.சங்கர சரவணன், இணை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், திரு.ச.இளங்கோ சந்திரகுமார், இணை இயக்குநர், பொது நூலக இயக்ககம் உள்ளிட்ட ஆறு பேர் கொண்ட குழு பங்கேற்றுள்ளது. மேலும், இந்த புத்தகக் கண்காட்சியில், தமிழ்நாட்டிலிருந்து ஆழி பதிப்பகம், எதிர் வெளியீடு, காலச்சுவடு போன்ற பதிப்பகத்தார் அரங்கம் அமைத்தும் தடாகம் மற்றும் எமரால்டு ஆகிய பதிப்பகத்தார் வணிகப் பங்கேற்பாளர்களாகவும் கலந்து கொண்டுள்ளார்கள்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட நடுகுத்தகை ஊராட்சியில் வடகிழக்கு பருவ மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பால் ரொட்டி பிஸ்கட் காலை உணவு வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் டி.தேசிங்கு, மாநில மாவட்ட நிர்வாகிகள் ம.ராஜி சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ் குமார், மேயர் ஜி.உதயகுமார், சன்பிரகாஷ் ப.ச.கமலேஷ், ஜி.ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர் யமுனா ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் என்.லட்சுமி, துணை தலைவர் ஆர்.செந்தாமரை, பொறியாளர் எம்.மோகன், அக்னி ராஜேஷ், நெமிலி கே. சுரேஷ்குமார், ப.கந்தன், ஜெ.சாக்ரடீஸ், இ.என்.சந்திரன், அரி, ரமேஷ், உதயா, ராதா, சாந்தகுமாரி, டி.மணிவண்ணன், ஜி.பி.பரணி தரன், இ.பிரதிப், ஜி.பிரவின் குமார், உள்பட பலர் உள்ளனர்.

அந்துமணி சிந்துமணி

அந்துமணி : ஏண்டி சிந்து; “ நீட் எழுதாமலே எடப்பாடி ஆட்சியில் 5000 டாக்டர்கள்” என்று திண்டுக்கல் சீனிவாசன் பேசியிருக்கிறாரே?

சிந்துமணி : **ஆமாண்டி அந்து; நீட் தேர்வு தமிழ் நாட்டுக்குள் நுழைந்ததே எடப்பாடி ஆட்சியில்தானே!**

உண்மைநிலை இப்படி இருக்க சீனிவாசன் ஏன் இப்படி அளந்து விடுகிறார் ?

எடப்பாடி கட்சியில் சீனிவாசன் இருக்கும் வரை, இப்படிப்பட்ட நகைச்சுவைக்கு அங்கே பஞ்சம் உண்டோ ?

‘தமிழிலக்கியத்தில் தலித் புனை கதைகள்’ நூல் வெளியீட்டு விழா!

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு – துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பங்கேற்பு

சென்னை, அக். 18 -

தமிழிலியக்கத்தில் தலித் புனை கதைகள் நூல் வெளியீட்டு விழா இன்று (18.10.2024 - வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு திருவள்ளுவர் அரங்கம் (எம்.28, மாநிலக் கல்லூரி - சென்னை 5) எனும் முகவரியில் நடைபெறுகிறது.

மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.இராமன் வரவேற்று வாழ்த்துகிறார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நூலை வெளியிட்டு தலைமை உரையாற்றுகிறார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. முதல் படியை பெற்றுக்கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

சென்னை கிறித்தவக் கல்லூரி தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் தி. இராஜகோபாலன் வாழ்த்துரை வழங்குகிறார்.

மாநிலக் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் க.சேகர் ஏற்புரையாற்றுகிறார்.

மாநிலக் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் ப.தாமரைக் கண்ணன் நன்றி கூறுகிறார்.

முனைவர் சீ.இரகு நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

சென்னையில் ஆதிதிராவிடர்

கல்லூரி - தொழிற்பயிற்சி விடுதிகளில் ஆய்வு!

அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் மேற்கொண்டார்!

சென்னை, அக்.18-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் சென்னை மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி விடுதிகளில் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாவட்டம், இராயபுரம் சிமெண்டரி சாலையில் அமைந்துள்ள ஆதி திராவிட கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகள், வில்லிவாக்கம் சிட்கோ நகர் ஆதிதிராவிட பள்ளி மாணவிகள் விடுதி மற்றும் கோடம்பாக்கத்தில் புதிதாக கட்டப்படவுள்ள ஆதிதிராவிடர் கல்லூரி விடுதிகளை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது ஆதி திராவிட நலத்துறை இயக்குநர் டி.ஆனந்த், மாவட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கே.ஜெ. வெற்றிகுமார் மற்றும் தாட்கோ செயற்பொறியாளர் அன்புகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.